# வண்ணாரப்பேட்டை-விம்கோநகர் மெட்ரோ ரயில் சேவை

## விரைவில் பிரதமர் தொடக்கி வைக்கிறார்




சென்னை, பிப். 8: மெட்ரோ ரயில் முதல்கட்ட விரிவாக்கத் திட்டத்தில், வண்ணாரப்பேட்டை-விம்கோ நகர் வழித்தடத்தில் மெட்ரோ ரயில் சேவையை பிரதமர் மோடி அடுத்த வாரம் தொடக்கி வைப்பார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த வழித்தடத்தில் மெட்ரோ ரயில் சேவை தொடங்கப்பட்ட பிறகு, மாதத்துக்கு 2 லட்சத்துக்கும் மேற்பட்டோர் பயணம் செய்வார்கள் என்று மதிப்பிடப்பட்டுள்ளது.

சென்னை மெட்ரோ ரயில் முதல்கட்டத்தில் விமானநிலையம் - வண்ணாரப்பேட்டை வரையும், பரங்கிமலை -சென்னை சென்ட்ரல்வரையும்திட்டப்பணிகள் நிறைவடைந்து, மெட்ரோ ரயில்கள் இயக்கப்பட்டு வருகின்றன.

**ரூ.3,770 கோடியில்...:** இதையடுத்து,வண்ணாரப்பேட்டை-திருவொற்றியூர் விம்கோ நகர் வரையிலான முதல் கட்ட மெட்ரோ ரயில் விரிவாக்கத் திட்டப் பணிகள் ரூ.3,770 கோடியில் நிறைவடைந்துள்ளன. மொத்தம் 9.051 கி.மீ. தொலைவுள்ள இந்த வழித்தடத்தில், 2 சுரங்கப்பாதை ரயில் நிலையங்களும், 6 உயர்நிலைப் பாதை ரயில் நிலையங்களும் என்று 8 மெட்ரோ ரயில் நிலையங்கள் இடம்பெறுகின்றன. இந்தவழித்தடத்தில்நடைபெற்று வரும்பணிகள் தற்போது இறுதிக் கட்டத்தை எட்டியுள்ளன.

இதற்கிடையில், இந்த வழித்தடத்தில் மெட்ரோ ரயில் பாதுகாப்பு ஆணையர் அபய் குமார் ராய் கடந்த வெள்ளிக்கிழமை முதல் ஞாயிற்றுக்கிழமை வரை மூன்று நாள்கள் ஆய்வு செய்தார். மூன்று நாள்களின் ஆய்வில் கிடைத்த தரவுகளையும், பாதுகாப்பு துணை ஆணையர்கள் எடுத்த தரவுகளையும் இணைத்து பரிசோதனை செய்யவுள்ளார்.

இந்தப் பணிகள் முடிந்த பிறகு, பாதுகாப்பு ஆணையர் சான்றிதழ் வழங்குவார். இதையடுத்து, இந்த வழித்தடத்தில் மெட்ரோ ரயில் சேவை தொடங்கவுள்ளது.

இது குறித்து சென்னை மெட்ரோ ரயில் நிறுவன அதிகாரிகள் கூறியது: கரோனா பொதுமுடக்க தளர்வுக்குப் பிறகு, மெட்ரோ ரயில் சேவை கடந்த ஆண்டு செப்டம்பரில் தொடங்கியது. இதையடுத்து, செப்டம்பர் மாதத்தில் சுமார் 3 லட்சம் பேர் மெட்ரோ ரயில்களில் பயணம் செய்தனர். இதன் பிறகு, பயணிகள் எண்ணிக்கை படிப்படியாக அதிகரித்தது. நிகழாண்டில் ஜனவரி மாதத்தில் 13.43 லட்சம் பேர் மெட்ரோ ரயில் சேவையைப் பயன்படுத்தினர்.

வண்ணாரப்பேட்டை- விம்கோநகர் வழித்தடத்தில் சேவை தொடங்கிய பிறகு அது பாரிமுனை, கோயம்பேடு, விமான நிலையம் செல்வோருக்கு மிகவும் பயனுள்ளதாக இருக்கும்.

வடசென்னையில் பெரும்பாலான மக்கள் தங்களின் போக்குவரத்து தேவைக்கு பேருந்து, ஷேர் ஆட்டோக்களைப் பயன்படுத்துகின்றனர். வண்ணாரப்பேட்டை-விம்கோநகர் வழித்தடத்தில் மெட்ரோ ரயில்சேவை தொடங்கும்போது, வடசென்னை மக்களின் பயணத் தேவை எளிதாக பூர்த்தியாகும். இதுதவிர, விரைவாகவும், பாதுகாப்பாகவும் செல்ல முடியும் என்றனர்.